[22nd September 1958

SRI A. VEDARATHNAM : ஸார், கிராமதானம், பூதானம் இவைகள் எல்லாம் இப்போது அச்சிடப்பட்ட பத்திரங்களில் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால் பூதான சட்டப்பிரகாரம் ரெஜிஸ்டர் செய்யவேண்டும். ஆகவே இதற்கு செலவு செய்யாமல் ரெஜிஸ்டர் செய்வதற்கு, சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I do not think this supplementary arises out of the main question. If the hon. Member is interested, he may put a separate question.

SRI S. NAGARAJA MONIGAR : ஸார், இப்போது தானமாக கொடுக்கக் கூடிய கிராமங்கள், தானமாக கொடுத்த பின் யாருடைய சுவாதீனத்தில் அல்லது யாருடைய மேற்பார்வையில் இருந்து வருகிறது என்பதைக் கூற முடியுமா ? இவ்விதம் தானம் கொடுத்தவர்கள் கையிலேயே திரும்பவும் கிராமங்கள் இருந்து வருவது சர்க்காருக்குத் தெரியுமா ? சர்க்கார் இப்படிப் பட்ட கிராமங்களுக்குப் பொறுப்பு எற்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : சர்க்காருக்கு இதில் நேரடியாக பொறுப்பு கிடையாது. கிராமதானம் கொடுப்பது அந்த கிராமத்திலுள்ள மக்களுக்குத்தான். ஆதலால் சில கிராமங்கள் மக்களுடைய பொறுப்பில் தான் இருந்து வருகிறது. சர்க்கார் இந்த கிராமங்களில் நல்ல முறையில் விவசாயங்களைச் செய்வதற்கும், கூட்டுறவு சங்கங்களை நடத்துவதற்கும் உதவி அளித்துக்கொண்டிருக்கிறது.

Expectation of life.

*402 Q.—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the normal expectation of life in Madras State in 1900;

(b) the same in 1957; and

(c) whether there is a proposal by the Government to increase the age of retirement from 55 to 60 years in accordance with the increase in the normal expectation of life?

9-20 a.m. THE HON. SRI C. SUBRAMANIAM : (a) & (b) Life tables are prepared by the Actuary, Government of India, at the time of Census and published along with the Census Reports. Census Reports have not been prepared for the years 1900 and 1957. The expectation of life at birth in Madras State in 1901 as given in the Census of India Report for 1931 and the expectation of life at birth in the South India Zone which includes Madras, Mysore, Travancore-Cochin and Coorg in 1951, as given in the Census Report for 1951, were as follows :—

	1901.	1951.
Males	26·21 years.	36·22 years.
Females ..	27·13 years.	37·23 years.

Therefore ladies live longer, Sir. (Laughter.)

(c) The age of retirement of Government servants has not been fixed on the basis of the normal expectation of life. The Government have also no proposal to increase the age of retirement of Government servants from 55 to 60 years.

22nd September 1958]

Sri S. LAZAR : இந்தக் காரணத்தைக்கொண்டு நீடிக்க உத்தேசம் இல்லை என்றாலும், எந்தக் காரணத்திற்காக உயர்நீதி மன்றத்திலுள்ள நீதிபதிகளுக்கு நீடிப்புக் கொடுக்கப்படுகிறதோ அந்தக் காரணத்தின் அடிப்படையில் மற்றவர்களுக்கும் கொடுக்கப்படுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : உயர்நீதி மன்றத்தில் நீதிபதிகளாக இருப்பவர்கள் 10, 12 பேர். இப்பொழுது வயதானவர்களுக்குத் தொடர்ந்து வேலை நீடிப்புக் கொடுப்பது முக்கியமல்ல. இளைஞர்கள், அதாவது புதிதாக வேலைக்கு வருகிறவர்களுக்கு வேலை கொடுப்பது முக்கியம். 60 வயதாக நீடித்தால் இளைஞர்களுக்கு வேலை கொடுக்கக்கூடிய சந்தர்ப்பம் மிகவும் குறைந்துவிடும். ஆகவே 55 வயது என்றிருப்பதுதான் சரி என்று சர்க்கார் கருதுகிறார்கள்.

Sri A. GOVINDASAMY : இங்கே ஆட்சிப் பொறுப்பு ஏற்று நடத்துகிற அமைச்சர்கள், 60-வயதுக்கு மேற்பட்டவர்கள், தகுதியுள்ளவர்களாக இருக்கும்பொழுது, மற்றவர்களை ஏன் அவ்வாறு வேலை செய்வதற்கு அனுமதிக்கக்கூடாது ?

The Hon. Sri C. SUBRAMANIAM : மந்திரிகளுடைய தகுதி வயதைப் பொறுத்து நிர்ணயிக்கக் கூடியதல்ல. இந்த சபை ஒப்புக்கொள்வதைப் பொறுத்திருக்கிறது. இந்த சபை பார்த்து 60 வயது இருக்கிறவர்கள் இருக்கக்கூடாது என்ற அபிப்பிராயத்தைத் தெரிவித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றினால், அது நிறைவேற்றப்படும். இந் சபைக்குத அதிகாரம் இருக்கிறதே தவிர, சர்க்காருக்கு கிடையாது.

Sri S. NAGARAJA MONIGAR : நாடு பெருவாரியாக முன்னேற்றம் அடையவேண்டும் என்று சொல்லுகின்ற நேரத்திலே, இளைஞர்களுக்கு வேலை கொடுக்கவேண்டும் என்ற காரணத்திற்காக, அனுபவம் முதிர்ந்தவர்களையும், தேக திடகாத்திரம் உள்ளவர்களையும் பயன்படுத்தாமல் விட்டு விடுவது சரியாகுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : வேறு துறைகளிலே அவர்களுடைய அனுபவத்தையும், அறிவையும், தகுதியையும் உபயோகித்துக்கொள்ளலாம். வேலையிலிருந்து ஓய்வு எடுக்கக்கூடிய உத்தியோகஸ்தர்கள் திடகாத்திரமாக இருந்தால், கிராமப் புறங்களிலே வேலை செய்வதற்கு போதிய அவகாசங்கள் இருக்கின்றன. அதைப் பயன்படுத்திக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

Madras Educational Rules

* 403 *Q.*—Sri S. LAZAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether as per paragraph 2 of G.O. No. 388, dated 4th March 1958 of the Education Department, necessary amendments have been made to the Madras Educational Rules;

(*b*) if not, whether the same will be made before the commencement of the next academic year; and

(*c*) if already made, whether a copy of the same will be placed on the table of the House?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) & (*b*) No, Sir. The question of formally amending the Madras Educational Rules in this respect is under consideration.

(*b*) Does not arise.